## இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் - 2017

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காணி மற்றும் கட்டிடங்கள் ஒன்றாக கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 07 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 3,627,071,868 தொகையான பல்கலைக்கழகத்தின் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியானது காணியின் பெறுமதியை தனியாக காட்டாமல் ஒன்றாக சேர்த்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்திற்கு எதிராக தொடரப்பட்ட பதின்மூன்று சட்ட வழக்குகளிலிருந்து எழுகின்ற நிகழத்தக்க பொறுப்புக்களின் தன்மை தொடர்பாக எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 8 இன் பிரகாரம் சுருக்கமான விளக்கமொன்றை வெளிப்படுத்துவதற்கு பல்கலைக்கழகம் தவறியிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2000 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியின் போது வங்கியால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 509,820 மற்றும் ரூபா 3,925,059 தொகையான முறையே நேரடிச் செலவுகள் மற்றும் வரவுகள் இனங்காணப்பட்டு கணக்குகளில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 தொடக்கம் 2012 வரையான காலப்பகுதியின் போது பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 113,508,496 பெறுமதியான திருகோணமலை வளாகம் தொடர்பான நிர்மாண வேலைகள் கணக்குகளில் மூலதனமாக்கப்பட்டு அதன் மீது பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் போதும் நடைபெறும் வேலையாக நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் மீதி ரூபா 113,391,627 ஆக காணப்பட்ட போதிலும் இக் கடன் மீதியானது ரூபா 112,243,299 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. ஆகையால், இவ் இரண்டு மீதிகளிற்கும் இடையே ரூபா 1,148,328 தொகையான விளக்கமளிக்கப்படாத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 பெறவேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம் (எஸ்விஐஏஎஸ்) மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பவற்றிடமிருந்து பெறவேண்டியவைகளாக முறையே ரூபா 9,751,892 மற்றும் ரூபா 1,408,946 தொகைகள் காட்டப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், மேற்படி நிறுவகங்களின் நிதிக்கூற்றுக்களில் தொடர்புபட்ட மீதிகள் செலுத்த வேண்டியவைகளாக காட்டப்பட்டிருக்கவில்லை. ஆகையால் அவ் மீதிகளின் அறவிடும் தன்மை கணக்காய்வில் ஐயத்திற்கிடமாகவுள்ளது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| நிதிப்பிரமாணம் 134(3) | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப்பிரமாணம் 880 | பல்கலைக்கழகத்தின் உப வேந்தர், பிரதிப் பதிவாளர், நிதியாளர், சிரேஷ்ட உதவி நிதியாளர், உதவி நிதியாளர் மற்றும் களஞ்சியப் பொறுப்பாளர் ஆகியோரிடமிருந்து பாதுகாப்பு வைப்புக்கள் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2015 யூலை 16 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை. | (i) ரூபா 1,574,556 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதியானது ரூபா 100,000 ஆன ஆகக்கூடிய எல்லையை விஞ்சி 08 சந்தர்ப்பங்களில் ஐந்து உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. |
| | (ii) செயல்நிமித்த உப கட்டுநிதியை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தரொருவர் உரிய வேலைகள் பூர்த்தியடைந்த பின்னர் உடனடியாக தீர்ப்பனவு செய்ய வேண்டிய போதிலும் ரூபா 1,827,556 கூட்டுமொத்தமான அத்தகைய உப கட்டுநிதிகள் 14 சந்தர்ப்பங்களில் 16 நாட்கள் தொடக்கம் 99 நாட்கள் வரையான காலவீச்சிலான தாமதத்தின் பின்னர் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (இ) | 2016 மார்ச் 17 ஆம் திகதிய 1/2016 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | செயற்பாட்டுக் குத்தகை முறையின் கீழ் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு அனைத்து அரசாங்க முகவர்களுக்கும் ஆலோசனை வழங்கப்படுகின்ற போதிலும் பல்கலைக்கழகம் மீளாய்வாண்டின் போது நிதிக் குத்தகை முறையின் கீழ் ரூபா 47,150,000 இற்கு மூன்று வாகனங்களை கொள்வனவு செய்திருந்தது. |
| (ஈ) | 2016 மார்ச் 01 ஆம் திகதிய 04/2016 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | |
| | (i) 5.1.6 ஆம் பிரிவு | சுய நிதியீட்டல் கற்கைநெறிகளின் வருமானத்தில் நேரடிச் செலவினத்தைக் கழித்த பின்னர் 0.01 சதவீதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் வேண்டப்பட்டிருந்தவாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 5.5 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் 1 ஆம் மாதிரியின் பிரகாரம் சுய நிதியீட்டல் கற்கைநெறிகள் மீதான வருமானச் செலவினக் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 107,259,847 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 335,047,226 ஆன பற்றாக்குறையொன்றினை விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போதான நிதிசார் விளைவுகளில் ரூபா 227,787,379 ஆன வீழ்ச்சியொன்றினை சுட்டிக்காட்டுகின்றது. பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவிடல் செலவினம் ரூபா 122,804,666 ஆலும் ஆளணி வேதனங்கள் ரூபா 108,767,458 ஆலும் அதிகரித்தமை இவ் வீழ்ச்சிக்குப் பிரதானமாக பங்களித்திருந்தன.

மீளாய்வாண்டினதும் முன்னைய 02 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் முறையே ரூபா 157,502,871 மற்றும் ரூபா 107,259,847 ஆன தேறிய பற்றாக்குறைகள் மீளாய்வாண்டில் ரூபா 335,047,226 வரை மேலும் வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் வேதனங்கள் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மேற்படி நிதி விளைவுகளிற்கு சீராக்கிய பின்னர் மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் பெறுமதிச் சேர்க்கை ரூபா 1,213,169,104 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இது ரூபா 3,824,878 ஆல் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) ஆராய்ச்சிப் படிக் கொடுப்பனவு

பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி பல்கலைக்கழகத்தின் நியமத்தை தரமுயர்த்துவதற்கு உதவி செய்வதுடன் அவ்வாறே தேசிய பொருளாதாரத்திற்கான அளவற்ற பங்களிப்பொன்றும் இதனால் வழங்கப்படும். ஆகையால் மீளாய்வாண்டுக் காலப்பகுதியின் போது கல்விசார் பதவியணியினர் மற்றும் கல்விசார் உதவி பதவியணியினரிற்கு ஆராய்ச்சி மானியங்களாக ரூபா 44.5 மில்லியன் தொகையை பல்கலைக்கழகம் ஒதுக்கீடு செய்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பல்கலைக்கழக ஆராய்ச்சி நடவடிக்கைகளை விரைவுபடுத்தி ஆக்கபூர்வமாக அமுல்ப்படுத்தவதற்காக ஆராய்ச்சி முகாமைத்துவக் குழு (ஆர்எம்சீ) மற்றும் ஆராய்ச்சி மேற்பார்வைக் குழு (ஆர்எஸ்சீ) என்பவற்றை ஸ்தாபிப்பதற்கும் அவற்றின் உசாவுதல் நிபந்தனைகளை (ரீஓஆர்) உருவாக்குவதற்கும் பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) ஆராய்ச்சிகள் மற்றும் பிரசுரிப்பு மானியங்களை வழங்குவதற்கான வழிகாட்டியின் 1.7 ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்திற்கும் மானியங்கள் வழங்கப்பட்டிருந்த ஆராய்ச்சியாளரிற்கும் இடையே உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகம் எந்தவொரு உடன்படிக்கையையும் கைச்சாத்திடாமல் ரூபா 1,390,500 பெறுமதியான 06 ஆராய்ச்சி முன்மொழிவுகளை அங்கீகரித்து அவற்றின் மீது ரூபா 1,364,347 தொகையை செலுத்தியிருந்தது.

(iii) பல்கலைக்கழகம் 2015 தொடக்கம் 2016 வரையான ஆண்டு காலப்பகுதியின் போது அவர்களின் ஆராய்ச்சி முன்மொழிவுகளை சமர்ப்பித்திருந்த 05 விரிவுரையாளர்களிற்காக ரூபா 10,676,062 தொகையை ஒதுக்கீடு செய்திருந்ததுடன் அதில் ரூபா 3,496,875 தொகை உரிய விரிவுரையாளர்களினால் ஆராய்ச்சி மானியங்களாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் மேற்குறிப்பிடப்பட்ட விரிவுரையாளர்கள் 2018 யூலை 25 வரையிலும் ஆராய்ச்சி அறிக்கைகளை சமர்ப்பித்திருக்காததுடன் இத் தாமதம் 10 மாதங்கள் தொடக்கம் 12 மாதங்கள் வரையிலான காலவீச்சிற்கு மேற்பட்டிருந்தது.

(iv) 2016 ஆம் ஆண்டில் மதிப்பீட்டிற்காக மதிப்பீட்டாளர்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த இரண்டு ஆராய்ச்சி முன்மொழிவுகளிற்காக ரூபா 3,000,000 மற்றும் ரூபா 295,000 தொகைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதலின் பிரகாரம் மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் மதிப்பீட்டாளர்களின் பரிந்துரைகள் 2 கிழமைகளினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மதிப்பீட்டு அறிக்கைகள் 2017 மார்ச் 31 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக இச் செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்ததுடன் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயலளவை வலுப்படுத்துதல் பாதிப்படைந்திருந்தது.

(v) பல்கலைக்கழக பீடங்களின் உரிய பிரிவுகள் ஆராய்ச்சி மானியக் கொடுப்பனவு மீதான விரிவான விபரங்களை வெளிப்படுத்துவதற்கு நாளதுவரையாக்கப்பட்ட முறையில் ஆராய்ச்சி மானியங்கள் தொடர்பான கோவைகளை பேணியிருக்கவில்லை.

(vi) உரிய திகதியில் ஆராய்ச்சி முன்மொழிவுகளை சமர்ப்பிக்காமை, ஆராய்ச்சி அறிக்கைகளை சமர்ப்பிக்கத் தவறியமை மற்றும் ஆராய்ச்சி மானியங்களை பெற்றிருந்த விரிவுரையாளர்களால் செயன்முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிப்பதில் தாமதங்கள் என்பன ஆராய்ச்சிகள் நம்பத்தகுந்ததாக மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதையும் அவை எவ்வளவு தூரம் ஆக்கபூர்வமானவையாக உள்ளன என்பதையும் இனங்கண்டு கொள்வதற்கு சிக்கலானதாக உள்ளது.

**(ஆ) இறுதிப் பரீட்சைகளில் மாணவர்களின் செயலாற்றல்**

மீளாய்வாண்டின் போது நான்கு பீடங்களினால் நடாத்தப்பட்ட 2010/2011, 2011/2012 மற்றும் 2012/2013 கல்வி ஆண்டுகளிற்கான இறுதிப் பரீட்சைகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **பீடத்தின் பெயர்** | **கல்வி நிகழ்ச்சித்திட்டம்/ கற்கைநெறி** | **பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை** | **மாணவர்களின் எண்ணிக்கை** | | **பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் சதவீதமாக சித்தியெய்தாமை** |
|---|---|---|---|---|---|
| | | | **சித்தியெய்தியமை** | **சித்தியெய்தாமை** | |
| கலை மற்றும் கலாச்சாரம் | பீ.ஏ (பொது) | 373 | 259 | 114 | 31 |
| வணிக மற்றும் முகாமைத்துவம் | பீ.பீ.ஏ (பொது) | 53 | 24 | 29 | 55 |
| | பீ.கொம் (பொது) | 75 | 28 | 47 | 63 |
| | பீ.கொம் (விசேட) | 30 | 20 | 10 | 33 |
| சுகாதாரப் பராமரிப்பு விஞ்ஞானம் | பீஎம்பீஎஸ் | 45 | 30 | 15 | 33 |
| வியாபார முகாமைத்துவ கற்கைகள் (திருகோணமலை வளாகம்) | தொடர்பாடலில் பீ.ஏ (பொது) | 17 | 05 | 12 | 71 |
| **மொத்தம்** | | **593** | **366** | **227** | **38** |

மீளாய்வாண்டின் போது 593 மாணவர்கள் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றியிருந்ததுடன் 366 மாணவர்கள் சித்தியெய்தியிருந்தனர். மேலும், இறுதிப் பரீட்சையில் 38 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 277 மாணவர்கள் சித்தியெய்தியிருக்கவில்லை. வணிக மற்றும் முகாமைத்துவ பீடம் மற்றும் வியாபார முகாமைத்துவக் கற்கைகள் பீடம் என்பன மாணவர்கள் சித்தியெய்தாத இந்த உயர் வீதத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தன. இதன் விளைவாக இவ் சித்தியெய்தாத மாணவர்கள் அவர்களின் பட்டத்தை பூர்த்தி செய்வதற்கு இன்னொரு ஆண்டிற்காக காத்திருக்க வேண்டியிருந்ததுடன் போதியளவு காலத்தில் தொழில் சந்தைக்கு உட்பிரவேசிக்க முடியாதிருந்தது.

**(இ) வெளிவாரி பட்டக் கற்கைநெறிகள்**

2010 ஒக்தோபர் 15 ஆம் திகதிய 932 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கல் கற்கை நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றிற்கான பாடத்திட்டம் முன்னரே தீர்மானிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கான சுயவிபரக் குறிப்பு/ தகைமை விபரிப்புக்களின் அடிப்படையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகம் 2017 திசெம்பர் 31 வரை வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கல் கற்கை நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றிற்கான பாடத்திட்ட செயன்முறையை பூர்த்தி செய்திருக்கவில்லை.

இதன் விளைவாக, 2013 ஆம் ஆண்டிலிருந்து வணிக மற்றும் முகாமைத்துவ பீடம் மற்றும் கலை மற்றும் கலாச்சாரம் பீடம் என்பவற்றிற்கான வெளிவாரிப் பட்டக் கற்கை நிகழ்ச்சித்திட்டங்களிற்காக புதிய விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கவில்லை. மேலும் விஞ்ஞான பீடம் மற்றும் விவசாய பீடம் என்பன அவர்களது வெளிவாரி பீ.எஸ்சீ பட்டக் கற்கை நிகழ்ச்சித்திட்டங்களை நிறுத்தியிருந்தன. மேற்படி சூழ்நிலை காரணமாக பல்கலைக்கழகம் நாட்டின் தற்போதைய மற்றும் வளர்ச்சியடைந்து வரும் சந்தைத் தேவைகளிற்கு பங்களிப்புச் செய்ய முடியாதிருந்தது.

## 4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதவியை இராஜினாமா செய்த, பதவி வறிதாக்கப்பட்ட, சேவைகளிலிருந்து ஓய்வுபெற்ற மற்றும் சேவையிலிருந்து வேறு நிறுவனங்களிற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற 98 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,644,418 கூட்டுத்தொகையான கடன்கள் 10 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்த போதிலும் இந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்காக உடனடி நடவடிக்கை எதனையும் பல்கலைக்கழகம் எடுத்திருக்கவில்லை.

(ஆ) 15 மரணமடைந்த உத்தியோகத்தர்களிற்குரிய ரூபா 540,144 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் அவர்களது பிணைதாரர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) வெளிநாடுகளில் முதுமானிப் பட்டங்களை தொடருவதற்காக கொடுப்பனவுடன் கற்றல் விடுமுறையை பெற்ற பின்னர் உடன்படிக்கைகளை மீறுவது பல்கலைக்கழகப் பதவியணியினரின் பொதுவான நடைமுறையாக உள்ளது. எவ்வாறாயினும், அவர்களிடமிருந்து செல்லுபடியான பிணையை பெறுவதற்கோ அல்லது அவர்களது சேமலாப நிதியத்திருந்து பிணைமுறி பெறுமதியை கழிப்பதற்கான ஒத்துழைப்பை பெறுவதற்கோ பல்கலைக்கழகம் 2018 மார்ச் 31 வரை நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. அதற்கிணங்க, 74 உத்தியோகத்தர்களிடமிருந்து 10 ஆண்டுகளிற்கு மேலாக ரூபா 177,002,812 ஆன மொத்தத் தொகை நிலுவையாக இருந்தது. எவ்வாறாயினும், அவர்களிடமிருந்து செல்லுபடியான பிணைகளை பெற்றுக்கொள்ளாததன் காரணமாக அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு பல்கலைக்கழகத்தால் முடியாதிருந்தது.

(ஈ) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவிற்கான நிலையத்தின் கணனி ஆய்வுகூடங்களின் பயன்பாட்டிற்காக 2015 யூன் மாதத்தில் பல்கலைக்கழகம் ரூபா 910,200 கிரயத்தில் கொள்வனவு செய்திருந்த 10 கிலோவாற்ஸையுடைய நான்கு யூபிஎஸ்கள் (UPSs) உத்தரவாதக் காலப்பகுதியினுள் 2016 செப்தெம்பர் மாதத்தில் பழுதடைந்திருந்ததுடன் இவ் அறிக்கைத் திகதி வரை அவை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக விரிவுரையாளர்கள் செய்முறை விளக்க அமர்வுகளை நடாத்துவதற்கு அதிக குழுக்களிற்கு மாணவர்களை பிரிக்க வேண்டியிருந்ததுடன் செய்முறை விளக்க அமர்வுகளும் தாமதமடைந்திருந்ததுடன்

கற்பித்தல் மற்றும் கற்றல் நடவடிக்கைகளிற்கு இடையூறாக இருந்தது. மேலும் மேற்படி இயலளவுடனான யூபிஎஸ்களின் பற்றாக்குறை காரணமாக கணனி ஆய்வுகூடங்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட முடியாதிருந்தது.

### 4.3 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

மீளாய்வாண்டு காலப்பகுதியின் போது ஆறு விநியோகஸ்தர்களிடமிருந்து உயிரியல் முறைமை தொழில்நுட்ப பிரிவிற்காக இரசாயனங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 4,520,802 தொகையை பல்கலைக்கழகம் செலவிட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் பிரதான பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் முன்னுரிமை அடிப்படையில் ஆய்வுகூடத்திற்கான இரசாயனங்களையும் கற்பித்தல் உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்காக ரூபா 20 மில்லியன் தெகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இப் பெறுகை 2016 பெப்ரவரி தொடக்கம் ஏப்ரல் வரையான காலப்பகுதிகளிற்கிடையே மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 6 மாதங்கள் தாமதத்துடன் 2016 ஒக்தோபர் 15 இலேயே பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஆகையால் பிரதான பெறுகை திட்டம் வினைத்திறனானதும் ஆக்கபூர்வமானதுமான முகாமைத்துவக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க பெறுகை வழிகாட்டி – 2006 இன் பிரகாரம் பெறுகைத் திட்டக் குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக பெறுகைக்கான தேவைப்பாடுகள் முறையாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.8.1 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகைக் குழுவிற்கு உதவி செய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றை திணைக்கள பெறுகைக் குழு கொண்டிருக்க வேண்டிய போதிலும் மேற்படி பெறுகைக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உயிரியல் முறைமை தொழில்நுட்ப ஆய்வுகூடத்தில் 2017 ஒக்தோபர் 26 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது 82 இரசாயனப் பொருட்களிற்கான காலாவதித் திகதிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக காலாவதியான பொருட்களை பயன்படுத்துவதற்கான சாத்தியத்தன்மையை கணக்காய்வில் குறிப்பிட முடியாதுள்ளதுடன் ஆய்வுகூட சோதனையின் போது இது ஆபத்துக்களை விளைவிக்கலாம்.

### 4.3.2 துப்பரவாக்கல் மற்றும் தூய்மைப்படுத்தல் சேவைகள்

பல்கலைக்கழகம் மற்றும் மாணவர் விடுதிகளில் துப்பரவாக்கல் மற்றும் தூய்மைப்படுத்தல் சேவைகளை வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது இரண்டு ஒப்பந்தங்களை பல்கலைக்கழகம் வழங்கியிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை பல்கலைக்கழகத்தால் ரூபா 80,830,221 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கேள்வி நிபந்தனையின் 05 ஆம் உட்பிரிவின் பிரகாரம் ஆகக் குறைந்தது 06 மாதங்களில் ஊழியர்களிற்கான ஈபிஎவ் மற்றும் ஈரீஎவ் கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்கான ஆவணச் சான்றை விலைமனுதாரர்கள் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு இந் நிபந்தனையை பரீட்சிக்கத் தவறியிருந்ததுடன் ஊழியர்களிற்கான ஈபிஎவ் மற்றும் ஈரீஎவ் கொடுப்பனவிற்கான ஆவணச் சான்றை சமர்ப்பித்திருக்காத விலைமனுதாரர் ஒருவரை தெரிவு செய்திருந்தது.

(ஆ) துப்பரவாக்கல் மற்றும் தூய்மைப்படுத்தல் சேவைகளில் ஈடுபட்டுள்ள 195 ஊழியர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல்கள் பதிவேடொன்றில் பதியப்பட வேண்டிய போதிலும் உரிய பிரிவுகளில் இந் நோக்கத்திற்காக பதிவேடுகள் எதுவும் பேணப்பட்டிருக்காததுடன் ஊழியர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல்களை சரிபார்க்காமல் சேவை வழங்குநர்களினால் தயாரிக்கப்பட்ட மாதாந்த விலைப்பட்டியல்களை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(இ) 04 மற்றும் 05 ஆம் இலக்க கேள்வி ஆவணங்களின் பொது அறிவுறுத்தல்களின் பிரகாரம் சேவை வழங்குநர்கள் தரமான துப்பரவாக்கும் பொருட்கள், தொற்று நீக்கிகள் மற்றும் நறுமணங்களை பயன்படுத்த வேண்டியதுடன் 01 மாத காலப்பகுதிக்கான நுகரத்தக்க இருப்பையும் பேணுதல் வேண்டும். எவ்வாறாயினும் சேவை வழங்குநர்களால் துப்பரவாக்கல் மற்றும் தூய்மைப்படுத்தல் சேவைகளிற்கு பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்களின் தரம் மற்றும் அளவை சரிபார்ப்பதற்கு பல்கலைக்கழகத்தின் பராமரிப்புப் பிரிவு தவறியிருந்தது. இதன் விளைவாக குளியல் அறைகள் மற்றும் மலசலகூடங்களில் காணப்பட்ட மந்தமான துப்பரவாக்கல் மற்றும் துர்நாற்றம் தொடர்பாக மாணவர்களாலும் மாணவர் விடுதிகளிலுள்ள உப விடுதிப் பொறுப்பாளர்களாலும் மேற்கொள்ளப்பட்ட சில முறைப்பாடுகள் காணப்பட்டன.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய நிதி மற்றும் ஏனைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியினரின் மனித மூலதன அபிவிருத்திக்காக வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களுடன் இணைந்த நோர்வேஜியன் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திடமிருந்து (என்ரீஎன்யூ) பெறப்பட்ட ரூபா 6,307,139 தொகையான நிதி உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் 2011 பெப்ரவரி 28 இலிருந்து வங்கிக் கணக்கின் நடைமுறைக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) வழங்கப்பட்ட சேவைகள் சார்பில் பல்வேறு தரப்பினர்களிடமிருந்து பணத்தை சேகரிப்பது தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை செயற்படுத்துவதற்காக கொமர்ஷியல் வங்கியில் பல்கலைக்கழகத்தால் நடைமுறைக் கணக்கொன்று பேணப்படுகின்றது. வருமானத்தை உருவாக்கும் மூலங்களில் மிகைப் பணத்தை முதலீடு செய்யாமல் ஒவ்வொரு மாதம் முழுவதும் அவ் நடைமுறைக் கணக்கில் ஏறத்தாழ ரூபா 32 மில்லியன் தொகையொன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2017 மே 26 இல் ரூபா 908,700 பெறுமதியான 1,300 பிளாஸ்ரிக் கதிரைகளை பல்கலைக்கழகம் கொள்வனவு செய்திருந்தது. அதில் ரூபா 328,530 பெறுமதியான 478 பிளாஸ்ரிக் கதிரைகள் உண்மையான தேவைப்பாட்டைக் கருத்தில் கொள்ளாமல் கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக களஞ்சியங்களில் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஈ) உபயோகிக்க முடியாதவையாக காணப்படுகின்ற 77 வகைகளிற்குரிய ரூபா 1,827,900 மொத்தப் பெறுமதியான இரண்டாயிரத்து முன்னூற்று பதின்னான்கு நுகரத்தக்க பொருட்கள் ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தப்படாமல் களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்தன.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் பதவிகளிற்கான 76 வெற்றிடங்கள் நிரப்பப்படாது காணப்பட்டன. மேலும் 2015 ஜனவரி மாதத்திலிருந்து பதிவாளர் பதவி வெற்றிடமாக இருந்த போதிலும் இவ் அறிக்கைத் திகதி வரையிலும் அவ் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்

ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் ஐக்கிய நாடுகளிற்கான 2030 நிகழ்ச்சிநிரலிற்கு இணங்கவும் 2017 ஒக்தோபர் 03 ஆம் திகதிய 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தை பின்பற்றியும் செயற்பட வேண்டியதுடன் சுற்றறிக்கைகள் மூலம் மேற்படி விடயம் தொடர்பாக அனைத்து அரசாங்க நிறுவனங்களாலும் அறிந்துகொள்ளப்பட்டிருந்தன. அதற்கிணங்க அனைத்து அரசாங்க நிறுவனங்களும் உரிய நிறுவனத்தின் அதிகார எல்லையின் கீழ் வருகின்ற தொழிற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறிந்திருக்க வேண்டிய போதிலும் பல்கலைக்கழகம் மேற்படி விடயத்தை அறிந்திருக்காததால் அதன் தொழிற்பாடுகள் தொடர்பான நோக்கங்கள் மற்றும் இலக்குகள் மற்றும் அவ் இலக்குகளை அடைந்து கொள்வதை அளவிடுவதற்குத் தேவையான சுட்டிகள் என்பன இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 கூட்டிணைந்த மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 – 2018 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டம் ஆறு பீடங்கள் மற்றும் ஒன்பது செயற்பாட்டுப் பிரிவுகளின் தந்திரோபாய முகாமைத்துவத் திட்டத்துடன் முறையாக ஒன்றிணைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2016 யூன் மற்றும் 2017 ஏப்ரலில் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் கூட்டிணைந்த திட்டம் என்பவற்றின் மீளாய்விற்காகவும் அதே போல் தற்போதைய நிலை மற்றும் எதிர்கால வழிகாட்டல்கள் என்பவற்றிற்காகவும் ரூபா 1,019,175 கிரயத்தில் இரண்டு செயலமர்வுகளை பல்கலைக்கழகம் நடாத்தியிருந்தது. எவ்வாறாயினும் மேற்படி தேவைப்பாடுகளின் பிரகாரம் 2017 – 2021 ஆண்டுகளிற்காக 3 – 5 ஆண்டு சுற்றுவட்டத்தையுடைய மீள்சுழற்சித் திட்டமாக மேற்படி கூட்டிணைந்த திட்டம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் பல்கலைக்கழக உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமை மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | முற்பணங்களின் தீர்ப்பனவு | முற்பணங்களின் தீர்ப்பனவிலுள்ள நீண்ட காலதாமதங்கள். |
| (ஆ) | ஆளணி நிர்வாகம் | நிரந்தரப் பதவியணியினரை நியமனம் செய்வதன் மூலம் சிரேஷ்ட முகாமையாளர்களிற்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமை மற்றும் கல்விசார் பதவியணியினரின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல்கள் பதிவுசெய்யப்படாமை. |
| (இ) | நிதியங்களை பேணுதல் | நிதியங்கள் உருவாக்கப்பட்டதற்கென குறித்துரைக்கப்பட்ட நோக்கங்கள் தொடர்பில் நிதியங்கள் பயன்படுத்தப்படாமை. |